## இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புத் தாது

# நாட்டின் மொத்தத் தேவைக்கு போதுமானதாக உள்ளதா?

## மக்களவையில் – கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 12

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புத் தாது மற்றும் எஃகு இரண்டின் மொத்த உற்பத்தி திறன் உண்மையான உற்பத்தி நுகர்வு ஆகியவை நாட்டின் மொத்த தேவைக்கு போதுமானதாக இருந்ததா? என மக்களவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவில் இரும்புத் தாது மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட எஃகு இரண்டின் மொத்த உற்பத்தி திறன் உண்மையான உற்பத்தி நுகர்வு ஆகியவை நாட்டின் மொத்த தேவைக்கு போதுமானதாக இல்லையா?

அப்படியானால் கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொன்றிலும் ஆலை வாரியாக எஃகு உற்பத்தி விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டின் சேலத்தில் உள்ள ஒருங்கிணைந்த எஃகு ஆலையின் மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கலுக்கு நிதியளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ஏதேனும் புதிய எஃகு உற்பத்தி நிறுவனம் உருவாக்கப்படுவது குறித்த விவரங்கள் தருக?

எஃகு சந்தை திறனையும் வாடிக்கையாளர் சேவைகளின் உயர் தரத்தையும் அதிகரிக்க இந்திய எஃகு ஆணையம் (SAIL) மற்றும் SAIL இன் பிற துணை நிறுவனங்கள் புதிய சந்தையைத் திறப்பதில் கவனம் செலுத்துகின்றனவா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை? என கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் எஃகு அமைச்சகத்தின் இணை அமைச்சர் பூபதி ராஜு ஸ்ரீநிவாச வர்மா எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட எஃகு மற்றும் இரும்புத் தாது உற்பத்தியின் திறன் உற்பத்தி மற்றும் நுகர்வு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-



கடந்த 2021-22, 2022-23, 2023-24 ஆண்டுகளில் உற்பத்தி திறன்/உற்பத்தி செய்யப்பட்ட/ நுகர்வு செய்த எஃகு (மில்லியன் டன்னில்) விவரம் கீழ் வருமாறு.

2021-22-ஆம் ஆண்டு 152.81 மில்லியன் டன் திறனில் 113.60 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. நுகர்வு 105.75 மில்லியன் டன்னாக இருந்தது.

2022-23-ஆம் ஆண்டு 151.25 மில்லியன் டன் திறனில் 123.20 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. நுகர்வு 119.89 மில்லியன் டன்னாக இருந்தது.

2023-24-ஆம் ஆண்டு 170.77 மில்லியன் டன் திறனில் 139.15 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. நுகர்வு 136.29 மில்லியன் டன்னாக இருந்தது.

அதே நேரத்தில் கடந்த 2021-22, 2022--23, 2023--24 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புத் தாது (மில்லியன் டன்னில்) விவரம் கீழ் வருமாறு.

2021-22-ஆம் ஆண்டு 254.10 மில்லியன் டன் இரும்புத்தாது உற்பத்தி செய்யப்பட்டது.

2022-23-ஆம் ஆண்டு 258.37 மில்லியன் டன் இரும்புத்தாது உற்பத்தி செய்யப்பட்டது.

2023-24-ஆம் ஆண்டு 276.75 மில்லியன் டன் இரும்புத்தாது உற்பத்தி செய்யப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் உள்ள பல்வேறு எஃகு உற்பத்தி நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட எஃகு குறித்த விவரங்கள் கீழ் வருமாறு:-

இந்திய எஃகு ஆணையம் வாயிலாக

2021-22-ல் 13.83 மில்லியன் டன், 2022-23-ல் 15.28 மில்லியன் டன், 2023-24-ல் 16.26 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ராஷ்ட்ரிய இஸ்பத் நிகாம் லிமிடெட் மூலமாக

2021-22-ல் 3.75 மில்லியன் டன், 2022-23-ல் 3.64 மில்லியன் டன், 2023-24-ல் 3.73 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

என்.எம்.டி.சி. ஸ்டீல் லிமிடெட் மூலம்

2023--24-ல் 0.53 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

டி.எஸ்.எல். குழு வாயிலாக

2021--22-ல் 18.74 மில்லியன் டன், 2022-23-ல் 19.46 மில்லியன் டன், 2023-24-ல் 21.15 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஏ.எம்./என்.எஸ். குழு மூலம்

2021-22-ல் 7.22 மில்லியன் டன், 2022--23-ல் 6.68 மில்லியன் டன், 2023--24ல் 7.55 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஜெ.எஸ். டபிள்யு. எல். குழு மூலம்

2021-22-ல் 16.37 மில்லியன் டன், 2022-23-ல் 21.79 மில்லியன் டன், 2023-24-ல் 23.26 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஜெ.எஸ்.பி.எல். நிறுவனம் மூலம்

2021-22-ல் 5.15 மில்லியன் டன், 2022-23-ல் 5.42 மில்லியன் டன், 2023-24-ல் 5.75 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

நாட்டில் உள்ள மற்ற நிறுவனங்கள் மூலம்

2021-22-ல் 48.54 மில்லியன் டன், 2022-23-ல் 50.93 மில்லியன் டன், 2023-24-ல் 60.92 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆக மொத்தம்

2021-22-ல் 113.60 மில்லியன் டன், 2022-23-ல் 123.20 மில்லியன் டன், 2023-24-ல் 139.15 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆதாரம்: கூட்டு ஆலைக் குழு

எஃகு என்பது ஒழுங்குபடுத்தப்படாத துறையாகும்> மேலும் தமிழ்நாடு உட்பட நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் எஃகுத் துறையின் வளர்ச்சிக்கு உகந்த கொள்கை சூழலை உருவாக்குவதன் மூலம் ஒன்றிய அரசு ஒரு வசதி ஏற்படுத்திக் தருவதாக செயல்படுகிறது. எஃகு ஆலை அமைப்பது தொடர்பான முடிவுகள், மூலப் பொருள் கிடைக்கும் தன்மை, துறைமுகத்திலிருந்து தூரம், தளவாடங்கள் போன்ற தொழில்நுட்ப -வணிகக் கருத்தாய்வுகளின் அடிப்படையில் தொழில்துறையால் எடுக்கப்படுகின்றன.

ஆண்டுக்கு 1,80,000 டன் துருப்பிடிக்காத எஃகு அடுக்குகளை உற்பத்தி செய்யும் திறனை அதிகரிக்க இந்திய எஃகு ஆணையம் (SAIL) ஏற்கனவே சேலம் எஃகு ஆலையை விரிவுபடுத்தி நவீனப்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

---

# தலைமைக் கழக நிர்வாகிகள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **பூவை சி.ஜெரால்டு** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு இணைச் செயலாளராகவும்;**

தி.மு.க. மாணவர் அணி இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **எஸ்.மோகன்** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **தி.மு.க. வர்த்தகர் அணி துணைத் தலைவராகவும்** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# சென்னை மேற்கு மாவட்டம் நடத்தும் தொடர் 72 பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



சேப்பாக்கம் பகுதி திமுக மாணவர் அணி சார்பில் இன்று (12-03-2025 - புதன் கிழமை) மாலை 6.00 மணிக்கு நடைபெறும் மாபெரும் பொதுக் கூட்டம் விபரம்!

| வ. எண் | வட்டம் / அணி | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மாணவர் அணி, சேப்பாக்கம் பகுதி | வழக்கறிஞர் வி.கார்த்திக் பகுதி மாணவர் அணி அமைப்பாளர் | ஜானி ஜான்கான் ரோடு, மாணிக்கம் மேஸ்திரி தெரு | ஆடுதுறை உத்தராபதி தலைமைக்கழக பேச்சாளர் ஜெயகுமரேஷ் தலைமைக்கழக பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் / தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி/வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு முதல்வர் – கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி 142 வது வட்டம் 90வது பாகத்தில் பாக பொறுப்பாளரும், வட்ட செயற்குழு உறுப்பினருமான கே.உமாசங்கர் ஏற்பாட்டில் அபித்காலனி முனையில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி கழக புதிய கல்வெட்டை திறந்து கழக இருவண்ணகொடியேற்றி இனிப்புகள் வழங்கினார். உடன் பகுதி அவைத்தலைவர் களக்காடிஎல்லப்பன், பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்டகழக செயலாளர் எம்.நாகா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

---

## திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

# வத்தலக்குண்டு தெற்கு, வத்தலக்குண்டு வடக்கு, நிலக்கோட்டை மேற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கடந்த 27.11.2024 அன்று திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள வத்தலக்குண்டு வடக்கு, வத்தலக்குண்டு தெற்கு- நிலக்கோட்டை மேற்கு ஆகிய ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வொன்றியங்களுக்கான பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக மேற்சொன்ன ஒன்றியங்களுக்கு கூடுதலாக ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகின்றனர்.

இந்த ஒன்றியப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்ட அந்தந்த ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வத்தலக்குண்டு தெற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :சி. ஆரோக்கிய சாமி, 7/107/1,மேலக்கோவில்பட்டி, நிலக்கோட்டை வட்டம்

வீ. பழனிச்சாமி, வடக்குத்தெரு, தெப்பத்துப் பட்டி,நிலக்கோட்டை வட்டம்

**வத்தலக்குண்டு வடக்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :ரா. ராஜ்குமார், தெற்குத் தெரு, வத்தலக்குண்டு, நிலக்கோட்டை வட்டம்.

பெ.முத்து, எழுவனம்பட்டி & அஞ்சல், நிலக்கோட்டை வட்டம்.

**நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம்**

ஏற்கனவே நிலக்கோட்டை மேற்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்ட மு.ராஜாங்கம் அவர்களை விடுவித்து அவருக்குப் பதிலாக பெ.விஜயகுமார், (இராஜதானிக்கோட்டை, அம்மையநாயக்கனூர்) அவர்கள் பொறுப்புக்குழு உறுப்பினராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

# தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணித் தலைவராக பொறுப்பு வகித்து வரும் வழக்கறிஞர் **இரா. ராஜீவ்காந்தி** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **கழக மாணவர் அணிச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

# தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **திரு.சி.வி.எம்.பி.எழிலரசன்** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **கழக கொள்கைப் பரப்புச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## தி.மு.கழகத்தின் சார்பில்

# ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோர்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.கழகத்தின் சார்பில் ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோருடன் கீழே குறிப்பிட்டுள்ள பேச்சாளர்களும் இணைந்து பங்கு பெறுவர்.

1. திரு. டி.எம். செல்வகணபதி எம்.பி.,
2. திரு. கே.என். அருண்நேரு, எம்.பி.,
3. திரு. தங்க தமிழ்செல்வன், எம்.பி.,
4. திருமதி. நாக நந்தினி
5. திரு. ராஜா தமிழ்மாறன்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

தலைமை: நே.சிற்றரசு! முன்னிலை: து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, ஐ.கென்னடி, கார்த்திக் மோகன்

# சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசுக்கு எதிரான மாபெரும் பொதுக்கூட்டம்!

வாகை சந்திரசேகர் – தஞ்சை கலைமணிபாரதி – தயாநிதி மாறன், எம்.பி. – எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. – நா. எழிலன் எம்.எல்.ஏ. கண்டன உரை!



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தல்படியும், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மும்மொழிக் கொள்கையை எதிர்த்தும், தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியைத் தராததை கண்டித்தும் ஒன்றிய அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் இன்று (12.03.2025 - புதன் கிழமை) மாலை 06.00 மணி அளவில் அண்ணாநகர், என் பிளாக், 2வது பிரதான சாலையில் எனது (நே.சிற்றரசு) தலைமையில் நடைபெறுகிறது.

ஒன்றிய அரசைக் கண்டித்து கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர், தலைமைக் கழக பேச்சாளர் தஞ்சை கலைமணிபாரதி ஆகியோர் கண்டன உரையாற்றுகிறார்கள். மேலும் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன்,எம்.எல்.ஏ., கழக மருத்துவர் அணி செயலாளர் நா.எழிலன், எம்.எல்.ஏ., ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, வர்த்தகர் அணி மாநில துணை செயலாளர் ஐ.கென்னடி, தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

இக்கண்டன கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதி செயலாளர்கள், மாவட்ட / மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், தலைவர் / துணைத் தலைவர்/ துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்டக் கழக நிர்வாகிகள் / மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் கழக இந்நாள்/முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்ட முடிவில் 102அ வட்டக் கழக செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார், 102வது வட்டக் கழக செயலாளர் பி.சந்திரசேகர், மாமன்ற உறுப்பினர் கே.ராணி ரவிச்சந்திரன் நன்றியுரையாற்றுகிறார்கள்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.




திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், பெரியபுலியூர் ஊராட்சி, கிமள்ளூர் கிராமத்தில் 150 மகளிருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சேலைகள் மற்றும் மதிய உணவு முன்னாள் மாவட்டச்செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். நிகழ்;ச்சியில் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், மு.பாஸ்கர், பா.முத்துசாமி, டி.மஸ்தான், டி.முனிவேல், யேசுரத்தினம், உதயகாந்தம்மாள், சந்திரமோகன், முத்து, கே.வி.நாகராஜ், எம்.அருள், விஜய்வின்சென்ட், முகிலன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.